பரிசுத்த வாழ்க்கைக்கான அறிக்கை

தேவனுடைய வார்த்தையின்படி வாழ்வதின் மூலம் என்னை நான் பரிசுத்தமாய்க் காத்துக் கொள்ள முடியும்.[1]

தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்.[2]

என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும்.[3]

என் கண்களோடே உடன்படிக்கை பண்ணின நான் ஒரு கன்னிகையின் மேல் நினைவாயிருப்பதெப்படி?[5]

பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறக்கும், பாவம் பூரணமாகும் போது, மரணத்தைப் பிரப்பிக்கும்.[6]

நான் ஜீவனைத் தெரிந்துக்கொண்டு வேசித்தனத்திற்கு விலகியோடுகிறேன்.[7] ஆதலால், நானும் என் பிள்ளைகளும் நீடித்து வாழ்வோம்.[8]

என் சரீரம் பரிசுத்த ஆவியின் ஆலயம். நான் எனக்குச் சொந்தமானவன் அல்ல.[9]

தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்.[10]

இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தில் ஜெபிக்கிறேன். ஆமென்.

[1] சங்கீதம் 119:9–11
[2] சங்கீதம் 51:10
[3] சங்கீதம் 51:2
[4] யோபு 31:1
[5] மத்தேயு 18:9
[6] யாக்கோபு 1:15
[7] 1 கொரிந்தியர் 6:18
[8] உபாகமம் 30:19
[9] 1 கொரிந்தியர் 6:19
[10] சங்கீதம் 139:23,24

சங்கீதம் 119:9–11

வாலிபன் தன் வழியை எதினால்
சுத்தம்பண்ணுவான்? உமது
வசனத்தின்படி தன்னைக்
காத்துக்கொள்ளுகிறதினால்தானே.
என் முழு இருதயத்தோடும்
உம்மைத் தேடுகிறேன், என்னை
உமது கற்பனைகளைவிட்டு
வழிதப்பவிடாதேயும். நான் உமக்கு
விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு,
உமது வாக்கை என்னிருதயத்தில்
வைத்து வைத்தேன்.

சங்கீதம் 51:10

தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே
சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை
என் உள்ளத்திலே புதுப்பியும்.

யோபு 31:1

என் கண்களோடே
உடன்படிக்கைபண்ணின நான்
ஒரு கன்னிகையின்மேல்
நினைப்பாயிருப்பதெப்படி?

மத்தேயு 18:9

உன் கண் உனக்கு இடறல்
உண்டாக்கினால், அதைப்
பிடுங்கி எறிந்துபோடு; இரண்டு
கண்ணுள்ளவனாய், எரிநரகத்தில்
தள்ளப்படுவதைப்பார்க்கிலும்,
ஒற்றைக்கண்ணனாய் ஜீவனுக்குள்
பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்.

யாக்கோபு 1:15

பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து,
பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம்
பூரணமாகும்போது, மரணத்தைப்
பிறப்பிக்கும்.

1 கொரிந்தியர் 6:18

வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள்.
மனுஷன் செய்கிற எந்தப் பாவமும்
சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும்;
வேசித்தனஞ் செய்கிறவனோ தன்
சுயசரீரத்திற்கு விரோதமாய்ப்
பாவஞ்செய்கிறான்.

உபாகமம் 30:19

நான் ஜீவனையும் மரணத்தையும்,
ஆசீர்வாதத்தையும் சாபத்தையும்
உனக்கு முன் வைத்தேன் என்று
உங்கள்மேல் வானத்தையும்
பூமியையும் இன்று சாட்சிவைக்கிறேன்;
ஆகையால், நீயும் உன் சந்ததியும்
பிழைக்கும்படிக்கு, நீ ஜீவனைத்
தெரிந்துகொண்டு,

1 கொரிந்தியர் 6:19

உங்கள் சரீரமானது நீங்கள்
தேவனாலே பெற்றும்
உங்களில் தங்கியும் இருக்கிற
பரிசுத்த ஆவியினுடைய
ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள்
உங்களுடையவர்களல்லவென்றும்
அறியீர்களா?

சங்கீதம் 139:23,24

தேவனே, என்னை ஆராய்ந்து, என்
இருதயத்தை அறிந்துகொள்ளும்;
என்னைச் சோதித்து, என்
சிந்தனைகளை அறிந்துகொள்ளும்.
வேதனை உண்டாக்கும் வழி
என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து,
நித்திய வழியிலே என்னை நடத்தும்.

For more copies of this bookmark please contact a Derek Prince Ministries office below.

DPM-India (English)
admin@derekprince.in
derekprince.com/en-in

DPM-India (Tamil)
admin@derekprince.in
www.derekprince.com/ta

DPM-Asia/Pacific
enquiries@dpm.co.nz
www.derekprince.com/en-nz

DPM-Australia
enquiries@au.derekprince.com
www.derekprince.com.au